**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:MC.14/2022**
**Prosecution Witnesses :1**

| | | | |
|---|---|---|---|
| Name | : கற்பகம் என்ற அனிதா | Caste | : |
| Husband Name/ Father Name | : கார்த்திகேயன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆஜர். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(07.02.2026)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய வழக்கினை நிரூபணம் செய்ய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள அனைத்து சங்கதிகளும் எனக்குத் தெரியும். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்திற்கான திருமண அழைப்பிதழ் அசல் ம.சா.ஆ.1 ஆகவும், மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமண புகைப்படம் ம.சா.ஆ.2 ஆகவும், மனுதாரரின் ஆதார் அட்டை அசல் ம.சா.ஆ.3 ஆகவும், மனுதாரரின் குழந்தை ஹரிஷ்வாவின் பிறப்பு சான்றிதழ் (அசலுடன் ஒப்பிடப்பட்டு நகல் குறியீடு செய்யப்படுகிறது) ம.சா.ஆ.4 ஆகவும், குழந்தையின் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பிடப்பட்டு நகல் குறியீடு செய்யப்படுகிறது) ம.சா.ஆ. 5 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் எனது வயது 35 என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பி. டெக்.ஐ.டி முடித்துள்ளேன். அதை எனது நிரூபண வாக்குமூலத்தில் ஏன் சொல்லவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் வேண்டும் என்றே நான் படித்த படிப்பை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தற்போது எங்குவேலை பார்க்கிறேன் என்றால் கப்பலுரில் 5 டெக்ஸ்டைஸ்சில் வேலை பார்த்து வருகிறேன். நான் மாதம் சம்பளம் 8,000/- வாங்குகிறேன். அதுசம்பந்தமாக நான் எதுவும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்யவில்லை. ஏனென்றால் 2 மாதம் தான் வேலை செய்கிறேன். அதை தாக்கல் செய்ய எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. நான் 2 மாதத்திற்கு முன்பே வேலைக்கு சென்றதை மறைத்து இந்த நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தற்போது மாதம் ரூ.30,000/- செலவு செய்கிறேன் என்றால் சரிதான். குழந்தையின் பள்ளி செலவை காண்பிப்பதற்கான பில் உள்ளது. நான் அந்த பில்லை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.